புதுக்கோட்டை மாவட்டம் - புதுக்கோட்டை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் நிகழ்ந்த விபத்தில்

# உயிரிழந்த பெண் காவலரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ. 29 -

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த பெண் காவலரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ளதுடன் நிதியுதவி வழங்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

புதுக்கோட்டை மாவட்டம், மண்டையூர் காவல் நிலையத்தில் பெண் காவலராகப் பணிப்புரிந்துவந்த திருமதி.விமலா (வயது 28) க/பெ. மணிகண்டன் என்பவர் இன்று (28.11.2024) காலை 09.30 மணியளவில் புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர், பள்ளத்துப்பட்டியிலிருந்து பணி நிமித்தமாக புதுக்கோட்டை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது பின்புறமாக வந்த நான்குசக்கர வாகனம் எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் பெண் காவலர் திருமதி.விமலா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையுமடைந்தேன்.

பெண் காவலர் திருமதி. விமலா அவர்களின் உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

திருமதி.விமலா அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தின ருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. சார்பில், சோளிங்கர் மேற்கு ஒன்றியம் , ஜம்புகுளம் கூட் ரோட்டில் தி.மு.கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி 500க்கு மேற்பட்ட பொதுமக்களுக்கு உணவு வழங்கினார். இதில் மாவட்ட அவைத்தலைவர் ஏ. கே.சுந்தர மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் அசோகன், மாவட்டத் துணை செயலாளர் சிவானந்தம், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி , மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் வெங்கடேசன் மற்றும் மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நீண்ட கால அரசியல் அனுபவம் உள்ள

# முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்றைக்கு அரசியலுக்கு வந்தவர்கள் விமர்சிப்பதா?

## டெல்லியில் பேட்டி! டாக்டர் ராமதாஸ் – அன்புமணி ராமதாசுக்கு திருச்சி சிவா எம்.பி. கடும் கண்டனம்!

**புதுடெல்லி, நவ. 29 -**

**“நீண்ட கால அரசியல் அனுபவமுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்றைக்கு அரசியலுக்கு வந்தவர்கள் விமர்சிப்பதா?” என்று நாடாளுமன்ற மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா கடும் கண்டனம் தெரிவித்து பேட்டியளித்துள்ளார்.**

புதுடில்லியில் - நாடாளுமன்ற மாநிலங்களவை கழகக் குழுவின் தலைவர் திருச்சி சிவா எம்.பி. அளித்த பேட்டி வருமாறு :

**கேள்வி:** தொடர்ச்சியாக நீங்கள் ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ் கொடுக்கிறீர்கள். உங்களுக்கான அது பிரிவிலேஜ்ஆக இருக்கிறது. அதை தொடர்ச்சியாக நிராகரித்துக் கொண்டே இருக்கிறார்கள். அதை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?

**பதில்**: மணிப்பூர் கலவரம் ஓராண்டுக்கு மேலாக நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. சற்றேறக்குறைய 250 உயிர்கள் அதில் பலியாக இருக்கின்றன. ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்திருக்கிறார்கள். வீடுகள் இழந்திருக்கிறார்கள். ஏற்பட்டிருக்கும் சேதங்கள் கொஞ்சம் நஞ்சமல்ல. இன்னும் அந்த கலவரம் தொடர்வதற்கான சாத்தியக் கூறுகள் மட்டுமே இருக்கின்றன.

இதுநாள் வரை அரசாங்கம் அதை தடுத்து நிறுத்துவதற்கும், அங்கு சகஜநிலை திரும்புவதற்கும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எதுவுமே எடுப்பதில்லை. இந்த நாட்டின் ஒரு பகுதியில் வாழும் மலைவாழ் பகுதி மக்கள் இந்த அளவிற்கு தங்களுடைய நிம்மதியான வாழ்வு குலைந்து வாழ்கிறபோது, பொறுப்பற்ற நிலையில் ஒரு அரசாங்கம் இருக்கிறது. இத்தனைக்கும் இங்கே ஆளும் இதே பாரதிய ஜனதா அரசுதான் அங்கேயும் ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. இது பற்றி இதுவரை பிரதமர் வாய் திறக்கவில்லை. உள்துறை அமைச்சர் எந்த அறிக்கையும் தரவில்லை. காரணம், இது அவர்களுடைய கட்டுப்பாட்டில் வருகிறது. இது குறித்து பேசலாமா என்று நாங்கள் முயன்றால்கூட, அதற்கும் அனுமதி தருவதில்லை. ஒன்று அவர்களாக பேசும் முன் வர வேண்டும் அல்லது நாங்கள் பேச வேண்டும் என்று சொல்கிறபோது, எங்களை பேச அனுமதிக்க வேண்டும். நாடாளுமன்றம் என்பது கருத்துகளை பகிரவும், உணர்வுகளை எடுத்து வைக்கவும், இருதரப்பு கருத்து பரிமாற்றத்திற்குப் பின்னால், ஒரு தீர்வு காண்பதற்கான ஒரு ஜனநாயக அமைப்பில் உள்ள ஒரு மிகப்பெரிய மன்றம். அங்கு பேச அனுமதி இல்லை.

அதேபோல, அதானி மீது அமெரிக்க நீதிமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு. அதில் உண்மை இருக்கிறது, இல்லை என்பதை அரசாங்கம் ஒரு விவாதத்தின் மூலம் பதில் சொல்லலாம். எதிர்க் கட்சிகள் குற்றச்சாட்டு சொல்வது அவர்களுடைய பணி என்பதைவிட, சூழ்நிலையைக் குறித்து கருத்துகள் சொல்கிறபோது, அதற்கு விளக்கம் சொல்ல வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. அறிஞர் அண்ணா சொல்வார்கள், “எதிர்க்கட்சி என்பது வெறும் கரண்டியை, அகப்பையை சுழற்றுவதுபோல; ஆளுங்கட்சி என்பது அதில் உளுந்தை வைத்து கொண்டு நடப்பதை போல” என்று சொல்வார்கள். அதை அவ்வளவு சாதாரணமாக பயன்படுத்த முடியாது. எனவே, நிதானமாக செயல்பட வேண்டிய அரசாங்கம், எதிர்கட்சிகள் வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கோ அல்லது கேள்விகளுக்கோ பதில் சொல்ல மறுத்து, அதானி பிரச்சினை இதுனால் வரை பேசுவதற்குகூட அவர்கள் முன் வரவில்லை.

அதேபோன்று, உத்தர பிரதேசம் சம்பல் பகுதியில் இரண்டு பிரிவினருக்கான மோதல் வளர்ந்து கொண்டே போகிறது. இது எல்லாம் குறித்து பேச வேண்டும் என்பதற்காகத்தானே நாடாளுமன்றம். இதுகுறித்து பல்வேறு தரப்பில் இருந்து பல்வேறு கட்சிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரச்சினை, உத்திரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் சம்பல் பிரச்சினையைப் பற்றியும், எங்களைப் போன்றவர்கள் மணிப்பூர் பற்றியும், அதானி பற்றியும், காங்கிரஸ் கட்சியினர் நிறைய கொடுத்திருந்தார்கள். ஆனால், வழக்கம்போல் அவைத் தலைவர் நான் இதையெல்லாம் எடுத்துக் கொள்ள முடியாது. வேறு வகையில் பேசுங்கள் என்று சொல்கிறார். வேறு எந்த அடிப்படையில் பேசுவது என்று தெரியவில்லை.

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும்



உரை என்று சொன்னால்கூட, அதில் எல்லாவற்றையும் பற்றி பேசலாம். ஆனால், இந்த முறை என்பது வெறும் மசோதாக்கள் மட்டும்தான் விவாதத்திற்காக தயார் நிலையில் இருக்கின்றன.

இது பற்றி நாங்கள் தனியாக பேச வேண்டும் என்று ஒரு குறுகிய நேர விவாதத்தில் அனுமதி கேட்டால் அவர்கள் தரப் போவதில்லை. எனவே, அதை வலியுறுத்தி நாங்கள் குரல் கொடுக்கிறபோது, எங்களுக்கு பதில் சொல்லவும் விருப்பம் இல்லாமல், நாட்டு மக்களுக்கு விளக்கம் சொல்கிற கடமையையும் தவிர்த்துவிட்டு, அவர்கள் அவையை மட்டும் ஒத்திவைத்து கொண்டே செல்கிறார்கள். எங்கே போகிறது நாடு? தெரியவில்லை.

**கேள்வி:** ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் முதல் நாள் பிரதமர் சொல்வது,

“ஒவ்வொரு கூட்டத் தொடரும் ஆக்கப்பூர்வமாக இருக்க வேண்டும்”. அதேபோன்று, அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும் ஒன்றிய அரசு தயாராக இருக்கிறது. எந்த ஒரு பிரச்சினை என்றாலும் பேசுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். தொடர்ந்து எதிர்க்கட்சிகளின் நிராகரிப்பை எப்படி பார்க்கிறீர்கள்?

**பதில்:** நான் இதைப்பற்றி நேற்றே சொன்னேன். பிரதமர் எங்களை குற்றம் சொல்கிறாரே தவிர, அவருடைய கடமையைச் செய்கிறாரா? நாடாளுமன்றத்திற்கு வருகிறார். அங்கிருக்கும் அவருடைய அலுவலகத்திற்கு செல்கிறார். ஆனால் அவைக்குள் வருவதில்லை. யாராவது கேள்வி கேட்டால், அதற்கு எழுந்து பதில் சொல்கிற பொறுப்பை தட்டிக் கழிக்கிறார். இப்போது வருவதே கிடையாது. அந்தப் பக்கமே எட்டிப் பார்ப்பது இல்லை என்றால் இவர்கள் விவாதத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள். எதிர்க்கட்சிகளின் கருத்துக்கு மதிப்பளிக்க விருப்பம் இல்லாதவர்கள். நாடாளுமன்ற ஜனநாயகம் என்பதை பின்பற்றும் இந்த நாட்டில் அவருடைய கருத்துக்களை கேட்டு நமக்கு சொல்ல வேண்டிய பெரிய பொறுப்பு. இது ஒன்றும் பதவி அல்ல. பெரிய பொறுப்பு - கடமை. “When power increases, Responsibility also increases”. அதைத்தான் புரிந்து கொள்ள வேண்டும். பதவி கூடுகிறபோது, பொறுப்பி அதிமாகிறது. பதில் சொல்ல வேண்டும் என்ற கடமை இல்லாமல், எங்களை குற்றம் சொல்கிறார். வேடிக்கையாக இருக்கிறது. நாங்கள் எங்களுடைய கோரிக்கையை வலியுறுத்திக் கொண்டுதான் இருக்கிறோம். இதுதான் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நாளை என்ன என்பது நாளைதான் தெரியும்.

**கேள்வி:** இதே அதானி விவகாரம் குறித்து, முதலமைச்சர் பதில் அளித்திருந்தார். அன்புமணி ராமதாஸ், இது முதலமைச்சர் பதவிக்கு அழகல்ல என்று கூறிய விவகாரம் குறித்து?

**பதில்:** இதற்கு நேற்றே பதில் சொல்லி விட்டார்கள். ஒரு முறை மருத்துவர் ராமதாஸ் அவர்கள், “என் தகுதிக்கு, நான் சென்று இவரை சந்திப்பதா?” என்றெல்லாம் முதலமைச்சர் குறித்து பேசினார். இது ரொம்ப நியாயமா? ஒரு முதலமைச்சர் பொறுப்பிற்கு வருகிறார் என்கிறபோது, யாராக இருந்தாலும் சரி, இவர் சற்றேறக்குறிய 70 வயதை தொட்டிருப்பவர். நீண்ட கால அரசியல் அனுபவம் உடையவர். நேற்று விளக்கம் தந்தாரே, அவருக்கு முன்பாகவே அவர் அரசியலுக்கு வந்தவர். சிறையில் அவதிப்பட்டவர்; உழைத்தவர்; மக்களோடு நடமாடியவர்; இன்றைக்கு முதலமைச்சர் பொறுப்புக்கு வந்திருக்கிறார். எனவே, அந்தப் பொறுப்பில் இருப்பவரை, ‘என் தகுதிக்கு நான் வந்து சந்திக்க வேண்டுமா?’ என்றெல்லாம் பேசினார்களே... அது மட்டும் சரியா? முதலில் அதைப் பற்றி சொல்லட்டும். முதலமைச்சர் சொன்னது ஒரு கருத்து அவ்வளவுதான். அதற்கு இவ்வளவு ஆவேசப்பட்டவர்கள், மன்னிப்பு கேட்க வேண்டும் என்று சொல்கிறவர்கள், எங்களுடைய கட்சித் தலைவர் என்பதைவிட இந்த நாட்டின் முதலமைச்சர், எல்லோருக்குமான முதல்வர்.

நாங்கள் பிரதமரைப் பற்றி பேசுகிறபோது, மரியாதையோடுதான் பேசுகிறோம். எங்களுடைய மாநிலத்திற்கு ஏதாவது தேவை என்றால், நாங்கள் அவரை தேடித்தான் செல்கிறோம். அவ்வாறுதான் செல்ல வேண்டும். காரணம், அதிகாரமும் பொறுப்பும் அவர்களிடத்தில் இருக்கிறது. அது போன்றுதான் முதல்வர். அவர்கள் இவரை விமர்சித்தும் பேசுவார்களாம்; ஆனால், இவர் ஒரு வார்த்தைகூட பேசக்கூடாது என்றால், என்ன விசித்திரம்?

இந்த அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவேற்றப்பட்டதையொட்டி, நேற்றைக்கு மைய மண்டபத்தில் ஒரு மிகப்பெரிய நிகழ்ச்சி நடந்தது. அதில்கூட நாங்கள் ஒரு கருத்தைச் சொன்னோம். நேற்றைக்குகூட, நான் ஒரு ஆங்கிலத் தொலைக்காட்சியில் சொன்னேன். அதில் முகப்புரை என்று சொல்கிற ‘Preamble’ என்பதை குடியரசுத் தலைவர் படிக்கப் படிக்க நாங்களும் படிக்க வேண்டும் என்பதாக இருந்தது. உறுதிமொழி எடுப்பது என்பது, அது ஒரே குரலில் இருந்தாக வேண்டும். ஆனால், அவர் திடீரென்று இந்தியில் படிக்கவும், இந்தி தெரியாத பல மாநிலத்தைச் சார்ந்தவர்கள் தடுமாறி, ஆங்கிலத்தில் படித்ததும், இரண்டு வேறுபட்ட குரல்கள் அங்கே ஒலித்துக் கொண்டிருந்தது. அவ்வளவு பெரிய நிகழ்ச்சியில், அதுவும் ஒரு மகத்துவமான நிகழ்ச்சியில், இவ்வாறு இரண்டு குரல்கள் ஒழிப்பது என்பது ஏற்புடையதாக இல்லை. அதாவது, அவர்கள் இந்தியில் பேசினார்கள், எங்களுக்கு கருத்து வேறுபாடு இல்லை. மொழிபெயர்ப்பு கிடைத்தது. ஆனால் உறுதிமொழி எடுக்க வேண்டும் என்பது, சொன்னதைத் திருப்பிச் சொல்ல வேண்டும் என்றால், எல்லோருக்கும் தெரிந்த மொழியில் சொல்லியிருக்க வேண்டும் என்று சொன்னோம். நேற்று நடந்த நிகழ்ச்சி போதாது, அவையிலும் அது பற்றி விவாதிக்க வேண்டும் என்று நாங்கள் கருத்து எடுத்து வைத்திருக்கிறோம். அதற்கு இசைவு தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், எப்போது என்று தெரியவில்லை. எங்களுடைய அவையைப் பொருத்தவரை, அரசியல் சட்டத்தின் 75 ஆண்டுகள் நிறைவு பெற்றது என்கின்ற ஒரு மகத்தான நிகழ்வினை, அவையிலும் விவாதமாக நடத்த வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு திருச்சி சிவா எம்.பி. பேட்டியளித்தார்.

ஜே.எஸ்.சரத்விக்னேஷ் முன்னிலை! ஆர்.குமரேசன் நிகழ்ச்சி ஏற்பாடு!

# கோவை - கவுண்டம்பாளையம் - 35 வது வார்டில் நல உதவிகள்!

## கோ.துரைப்பாண்டியன் தலைமை! நா.சம்பத் எம்.சி. பங்கேற்பு!

கோவை. நவ. 29 -

துணை முதல்வரும் கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47 வது பிறந்த தினத்தை முன்னிட்டு, கோவை வடக்கு மாவட்டம் கவுண்டம்பாளையம் பகுதியில் உள்ள 35 வது வட்டக் கழகத்தின் சார்பாக க.மருதமுத்து நினைவு படிப்பகத்தில், 35 வது வட்டக் கழக செயலாளர் ஆர்.குமரேசன் ஏற்பாட்டின் பேரில், கவுண்டம்பாளையம் பகுதி கழக செயலாளர் ஜே.எஸ்.சரத் விக்னேஷ் முன்னிலை வகிக்க, அவை தலைவர் சோ.துரைப்பாண்டியன் தலைமையில், 35 ஆவது வார்டின் மாமன்ற உறுப்பினர் நா.சம்பத் பொது மக்களுக்கும், கழக உறுப்பினர்களுக்கும் இனிப்புகள் வழங்கினார்.

பகுதிச் செயலாளர் ஜே.எஸ்.சரத் விக்னேஷ் கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.

இன்னும் பிற நலத் திட்ட உதவிகளும், கழக வட்ட செயலாளர் ஆர். குமரேசனால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், அனைத்து பி எல் ஏ 2 உறுப்பினர்களும், கழக நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள் பொதுமக்கள் பெருவாரியாக கலந்து கொள்ள சிறப்பாக கொண்டாடப்பட்டது. கவுண்டம்பாளையம் பகுதிக்கழகத்திற்கு உட்பட்ட 35 , 34, 33, 16, 17 ஆகிய ஐந்து வட்டக் கழகத்திலும் இனிப்புகள் நலத் திட்ட உதவிகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை கோலாகலமாக கொண்டாடினர்.



பண்ருட்டி நகர தி.மு.க. சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் விழாவையொட்டி பண்ருட்டி நகர மன்ற தலைவர் நகர கழகச் செயலாளர் க.இராஜேந்திரன் தலைமையில் கடலூர் மேற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் டாக்டர் நந்தகோபால கிருஷ்ணன் முன்னிலையில் பண்ருட்டி நான்கு முனை சந்திப்பில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி, பண்ருட்டி அரசு மருத்துவமனையில் உள்ள தாய்மார்கள், கர்ப்பிணி பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட வர்களுக்கு பிரட், ரஸ்க், பிஸ்கட், பழங்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் ஆனந்தி சரவணன், நகர மன்ற துணைத் தலைவர் சிவா, நகர அவைத் தலைவர் ராஜா, நகர துணை செயலாளர் கௌரி, அன்பழகன், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பரணி சந்தர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கே.எம்.தண்டபாணி முன்னிலையில்

# கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்முன் துணை முதல்வர் பிறந்தநாள் விழா!

## எஸ்.அன்புச்செழியன் தலைமையில் கழக வழக்கறிஞர்கள் பங்கேற்பு !

கோவை, நவ. 29 -

தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தின் முன்புறம் தி.மு.க. வழக்கறிஞர்கள் கேக் வெட்டி இனிப்பு வழங்கி பட்டாசு வெடித்தும் கொண்டாடினார்கள்.

கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தின் முன்புறம் கோவை மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் துணை முதலவர் உதயநிதி ஸ்டாலினின் அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடும் விதமாக கோவை மாநகர மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் எஸ்.அன்புச்செழியன் தலைமையில் தி.மு.க.மாநில சட்டத் துறை இணை செயலாளர் கே.எம். தண்டபாணி முன்னிலையில் பொதுமக்களுக்கும் வழக்கறிஞர்களுக்கும் கேக் மற்றும் இனிப்புகள் வழங்கி, பட்டாசு வெடித்து சிறப்புடன் கொண்டாடப் பட்டது.

இந்நிகழ்வில் கோவை மாநகர் மாவட்ட வழக்கறிஞரணி மாவட்ட தலைவர் மருது பாண்டியன், துணைத் தலைவர் மணி வேல், துணை அமைப்பாளர்கள் விக்ரம்,சலாவுதீன், எலிசபெத்ராணி, ஆசைத் தம்பி,வெற்றி, ராஜேஸ்குமார், கோகிலவாணி மற்றும் மூத்த வழக்கறிஞர்கள் முன்னாள் அமைப்பாளர் ஜி.டி.ராஜேந்திரன், கனகராஜ், எஸ்.ரவிச்சந்திரன், ராஜப்பன்,எஸ்.சந்திரமோகன், முனீர், ஆருஸ், கர்ணன், அற்புதராஜ், அருண்குமார், டி.ரவிச் சந்திரன் வழக்கறிஞர்கள் ராஜமாணிக்கம், விஜயகுமார், சி. என்.சந்திரன், முத்துகுமார், முத்து கிரு ஷ்ணன், வெங்கடாசலம், அரசு வழக்கறிஞர்கள் ரவிச்சந்திரன், அருள்குமார், சிவக்குமார், கண்ணன், முத்துவிஜயன், விஜயராகவன், கருஷ்ணமூர்த்தி, ராஜபிரியா, மோகன், முருகானந்தம், தர்மராஜ், ராஜன், விக்னேஷ், விஜயானந்த், சக்ரவர்த்தி, மனோகரன், பிரபாகரன், சுரேஷ், மகாவிஷ்னு, தாமோதரன், ஹேமந்த், லிங்கராஜா, அன்வர்தீன், பாண்டிக்குமார், சலீம், நூருல், தமிழ்செல்வி, அப்போலின் அற்புதராஜ், லலிதா, மணிமேகலை, மகேஸ்வரி, திவ்யபாரதி, ஜீவா, செண்பகவல்லி, சுகன்யா, சித்ரா, சத்யா உள்ளிட்ட முன்னூற்றுக்கும் மேற்பட்ட கழக வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் துணை முதல்வர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர், இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை எளியோர் எழுச்சி நாளாக கொண்டாடும் விதமாக அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலின்படி ஆலங்காயம் கிழக்கு ஒன்றியம், முல்லை மாணவ, மாணவிகள் தங்கும் விடுதியில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கேக் வெட்டி, மாணவ – மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் இனிப்புகள் வழங்கி, காலை சிற்றுண்டி வழங்கினார். தே.பிரபாகரன் , எஸ்.தாமோதிரன், பூ.சதாசிவம், கார்த்திக், சுபாஷ், நவீன்குமார், ஹரிஷ்குமார், மனோகரன், சி.வெங்கடேசன், சுந்தரமூர்த்தி, வி.எஸ்.கார்த்திக், பாண்டியன், எழிலரசிவெங்கடேசன், மணி, சரவணன், அசோகன், ஆப்பிள், பார்த்திபன், கோவிந்தராஜ், பாரதி, பாஸ்கர், ரமேஷ், சங்கர் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருச்சி எம்.எஸ். மணி

### நவம்பர் 29 (1980)



திராவிட இயக்க முன்னோடிகளில் ஒருவர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின்பால் மிகுந்த பற்றும் பாசமும் கொண்டவர்.

திருச்சி மாவட்டத்தில் தி.மு.கழகம் தழைத்தோங்க தொடக்கக் காலந்தொட்டுப் பெரும் பணியாற்றியவர்.

திருச்சி நகரக் கழகச் செயலாளராகவும், இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர் இவர் தொழிற்சங்க இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். நெருக்கடி நிலையின்போது ஓராண்டு மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.